# மெட்ரோ ரெயில் சேவை இன்று நள்ளிரவு 1 மணி வரை நீட்டிப்பு

சென்னை, டிச.31–

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம், ஆங்கில புத்தாண்டு கொண்டாட்டத்தை முன்னிட்டு பொதுமக்கள் மற்றும் மெட்ரோ பயணிகளின் வசதிக்காக இன்று (செவ்வாய்க்கிழமை) மெட்ரோ ரெயில் சேவையை இரவு 11 மணியிலிருந்து நள்ளிரவு 1 மணி வரை நீட்டித்து உள்ளது. 28 நிமிட இடைவெளியில் மெட்ரோ ரெயில் இயக்கப்படுகிறது.



கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில் அதிகரித்து வரும் பயணிகளின் தேவைகளை பூர்த்தி செய்ய, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ கார் இணைப்பு சேவையை கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில் நேற்று தொடங்கி உள்ளது. இந்த சேவை கிண்டியில் இருந்து டி.எல்.எப். வரை ரூ.10 கட்டணத்தில் இயக்கப்படுகிறது. ஏற்கனவே இயங்கும் ஷேர் ஆட்டோ சேவைகளுடன் கூடுதலாக கார் இணைப்பு சேவையும் கிண்டி மெட்ரோ ரெயில் நிலையத்தில் இருந்து இயக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை மெட்ரோ ரெயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்து உள்ளனர்.